குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.133/2023

அ.சா.1

2026–ம் ஆண்டு பிப்ரவரி 24–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பவித்ரன் | தொழில் | |
| தந்தை பெயர் | சங்கர் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.26 மணி,

Accused A1)Karthik, A2)Kumaresan are present. Advocate Mr.Balu present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் கசப்பேரியில் குடியிருந்து, விசைத்தறி தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். இவ்வழக்கின் புகார்தாரர் சண்முகம் எங்கள் வீட்டிற்கு அருகில் குடியிருந்து வந்தார். அவர் தற்போது இறந்துவிட்டார். கடந்த 2022 ஆம் ஆண்டு ஒரு நாள் இரவு 07.00 மணியளவில் இறந்துபோன சண்முகம் என்பவருக்கும், கார்த்திக் மற்றும் குமரேசன் ஆகியோருக்குமிடையே தகராறு நடந்தது. குமரேசன் மற்றும் கார்த்தி இருவரும் கையால் சண்முகத்தை அடித்தார்கள். சண்முகம் வீட்டில் மேற்படி சம்பவம் நடந்தது. சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன். போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

2. எனது வீட்டிற்கும், சண்முகம் என்பவரது வீட்டிற்கும் சுமார் 200 மீட்டர் தூரம் இருக்கும். சம்பவம் நடந்தபோது நான் எனது வீட்டிற்குள் இருந்தேன் என்றால் சரி. யார் என்ன சத்தம் போட்டார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரி. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவத்தன்று எனது வீட்டில் தறி ஓட்டிக்கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல.

S SHARMILA Digitally signed by S SHARMILA Date: 2026.02.24 17:40:29 +0530

3. நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சம்பவ இடத்தை பார்த்தபோது, சம்பவ இடத்தில் சுமார் 7 – 8 நபர்கள் இருந்தார்கள். ஆனால் சம்பவத்தில் இரண்டு நபர்கள் தான் ஈடுபட்டார்கள்.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 0.00 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2026.02.24 17:40:33 +0530